International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 02 April to June 2020 www.irjtsjournal.org

# நற்றிணைப் பாடல்களில் பழந்தமிழர்களின் விருந்தோம்பல்

ஷா. முஹம்மது அஸ்ரின்,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு *(UGC-JRF),*
ஜமால் முகமது கல்லூரி *(தன்னாட்சி),* திருச்சி *– 20.*

**முன்னுரை:**

அறிமுகம் இல்லாத மக்கள் வீடு தேடி வந்தாலும், அவர்களை அமர வைத்து விருந்து கொடுத்துப் பாதுகாக்கும் குணமுடையவர்களாக சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெண்கள் திகழ்ந்துள்ளனர். முகம் சுழிக்காமல் வீட்டிற்கு வருகின்ற உறவினர்களுக்கு அறுசுவை உணவை விருந்தாக வழங்கியதைச் சங்க இலக்கியப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் குறித்த செய்திகளை அகப்பாடல்களிலும், புறப்பாடல்களிலும் காண முடிகிறது. புறப்பாடல்களில் மன்னரின் கொடைச் சிறப்பாகவும், அகப்பாடல்களில் மகளிரின் பண்பாகவும் பாடப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது, எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாகப் போற்றப்படும் நற்றிணைப் பாடல்களைச் சான்றாகக் கொண்டு பழந்தமிழ்ப் பெண்களிடம் காணப்பட்ட விருந்தோம்பலை எடுத்துரைக்க முனைகிறது.

**விருந்தோம்பல்:**

விருந்தோம்பல் என்ற சொல்லானது ‘**விருந்து**’ மற்றும் ‘**ஓம்பல்**’ என்னும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். ‘**விருந்து**’ என்பதற்குப் ‘**புதியவர்**’ என்றும் ‘**ஓம்பல்**’ என்பதற்குப் ‘**பாதுகாத்தல்**’ என்றும் பொருள்படும். எனவே, இல்லத்தில் இருக்கும் பெண்களுக்குக் கணவன் அழைத்து வருகின்ற மனிதர்கள் பழக்கமில்லாதப் புதியவர்களே. அத்தகைய புதிய மனிதர்களுக்கு இன்முகத்துடன் வயிறார விருந்தளிப்பது மனைவிக்குரிய (பெண்களுக்குரிய) குணமாகும். இதனை,

**“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறத் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”**

**(தொல்.பொருள்.150:1-4)**

என்ற தொல்காப்பியரின் கூற்று வாயிலாக சங்க காலத்தில் தமிழ் மகளிர்கள் வீட்டிற்கு வருகின்ற மனிதர்களுக்கு உணவு கொடுத்துப் பாதுகாத்துள்ளனர் என்பது புலனாகிறது.

**குறிஞ்சி நிலத்தில் விருந்து:**

மலைகளில் வாழும் மக்கள் குளிரின் காரணமாகப் புலால் உணவை மிகுதியாக உட்கொள்வர். குறிஞ்சி நிலத் தலைவன் அம்பெய்திப் பிடித்த ஆண் பன்றியை (ஏற்றை) தனது இல்லத்திற்கு எடுத்துச் வருகிறான். அதனை பெற்றுக்கொண்ட தலைவி வீட்டில் தங்கியிருக்கும் உறவினர்களுக்குப் பக்குவமான முறையில் அறுத்துப் பங்கிடுகிறாள். இதனை,

**“வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை**
**புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டி**
**குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட!”**

**(நற்றிணை.336: 4-6)**

என்னும் தோழி கூற்றாக அமைந்த கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடல் அடிகளால் அறிய முடிகிறது.

மற்றொரு குறிஞ்சித் திணைப் பாடலில், கானவன் (குறிஞ்சி நிலத் தலைவன்) அம்பெய்திப் பிடித்த முள்ளம் பன்றியை தனது இல்லத்திற்கு எடுத்து வருகிறான். அதனை பெற்றுக்கொண்ட தலைவி வீட்டில் தங்கியிருக்கும் உறவினர்களுக்கு முறையாகச் சமைத்துக் கிழங்குடன் பங்கிடுவதாக அமைந்த,

**“கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை**
**தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு**
**காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்”**

**(நற்றிணை.85: 8-10)**

என்ற பாடல் வழியாக விலங்கினங்களின் தசைகளையும் (புலால் உணவை) இல்லத்தில் இருக்கும் விருந்தினர்களுக்குச் சமைத்துப் பகிர்ந்து உண்டதை உறுதிப்படுத்துகிறது.

**மருத நிலத்தில் விருந்து:**

மருத நிலத்தில் வாழும் பெண்ணின் பொருளாதார நிலையை மாங்குடி கிழார் கண்முன் காட்டுகிறார். காதுகளில் குழை என்ற காதணியையும், கைவிரலில் சிறிய மோதிரத்தையும் (சிறுதாழ்) ஆபரணங்களாகத் தலைவி அணிந்துள்ளாள். இத்தைகைய செல்வ நிலையில் வாழும் தலைவி (பெண்), வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்காக கைவிரல்கள் சிவக்கும் படியாக வாழை மரத்தில் இருந்து இலைகளை வெட்டுகிறாள். சமைப்பதால் ஏற்பட்ட புகையின் காரணமாகக் கண்கள் கலங்கியும், நெருப்பின் வெப்பத்தால் நெற்றியில் வியர்வைத் துளிகளுடனும் காணப்படுகிறாள். இதனை,

**“கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேழை**
**சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப**
**வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇ**
**புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்**
**பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்**

**அம்துகில் தலையில் துடையினள் நப்புலந்து**

**அட்டிலோளே அம் மா அரிவை**

**எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்று**

**சிறுமுள் எயிறு தோன்ற**

**முறுவல் கொண்ட முகம் ………….."**

**(நற்றிணை.120: 3-12)**

என்ற பாடலில் சமையல் செய்யும் போது ஏற்படும் துன்பங்களையும், தலைவனுடன் (கணவனுடன்) ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளையும் விருந்தினர்கள் அறியாத வகையில் தலைவி இன்முகத்துடன் விருந்தளித்து மகிழ்ந்ததை அறிய முடிகிறது. இல்லத்திற்கு இடைவிடாமல் வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்ற மருத நிலத் தலைவியின் பண்பை **"நல்மனை நனி விருந்து அயரும்" (நற்றிணை.280: 9)** என்ற பரணரின் பாடல் அடியால் அறிய முடிகிறது.

**நெய்தல் நிலத்தில் விருந்து:**

மீன் பிடித்தலையும் உப்பு விளைத்தலையும் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த நெய்தல் நில மக்கள், தங்களுக்கு அதிகப்படியாகக் கிடைத்த மீன்களை பிற நில மக்கள் கொடுக்கும் உணவுப் பொருட்களோடு பண்டமாற்றம் செய்துள்ளனர். எனவே, அவர்களது வீடுகளில் உணவுப் பொருட்கள் அளவின்றி குவிந்து காட்சியளிக்கும்.

**"வரையாத் தாரம் வருவிருந்து அயரும்**

**தன்குடி வாழ்நர் அம்குடிச் சீறூர்"**

**(நற்றிணை.135: 2-3)**

அந்த உணவுப் பொருட்களை விருந்தினராக வருகின்றவர்களுக்கு நெய்தல் நில மக்கள் வாரி வழங்கியுள்ளனர். இதற்குத் தடையின்றி உணவுப் பண்டங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், அவை விரைவில் கெட்டு வீணாகும் என்ற அச்சமும் காரணமாக இருக்கலாம்.

**பகல் விருந்து:**

நண்பகலில் வெயிலின் தாக்கம் அனைத்து நிலங்களிலும் கடுமையாக இருக்கும். ஆனால் கடற்கரையை கொண்டு விளங்கும் நெய்தல் நிலத்தில், நண்பகல் நேரத்தில் கடலில் இருந்து வீசும் காற்றும் வெப்பமாக இருக்கும். எனவே, நெய்தல் நிலத்தில் வாழும் மக்களுக்கு நண்பகல் நேரமானது ஏனைய நிலங்களில் வாழும் மக்களைக் காட்டிலும் துன்பத்தை விளைவிக்கும். அத்தகைய துன்பங்களைப் பெற்று இல்லம் நோக்கி வந்த விருந்தினரை உணவு கொடுத்து ஓம்ப வேண்டும் என நக்கீரர் அறிவுறுத்துகிறார்.

**"கதிர்கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்**

**திருவிடை வியல்நகர் வருவிருந்து அயர்மார்"**

**(நற்றிணை.258: 3-4)**

**பாலை நிலத்தில் விருந்து (இரவு விருந்து):**

இரவு நேரங்களிலும் வீடு தேடி வந்த விருந்தினர்களுக்கு இல்லத்தில் உட்கார வைத்து உணவு பரிமாறப்பட்டுள்ளது. வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு அறுசுவை உணவுகளை அன்புடன் சமைத்துப் பரிமாறுகின்றனர். இன்றைய உலகில் பெரும்பான்மையான வீடுகளில் புலால் (மாமிச) உணவுகளையே விருந்தினர்களுக்காக சமைக்கின்றனர்.

**“எல்லி வந்த நல்லிசை விருந்திற்கு**
**கிளரிழை அரிவை! நெய் துழந்தட்ட**
**விளரூன் அம்புகை எறிந்த நெற்றி”**

**(நற்றிணை.41: 6-8)**

என்ற இளந்தேவனாரின் பாடல் வழியாகச் சங்க காலத்திலேயே தமிழ் மக்கள் புலால் உணவை விருந்தினர்களுக்குப் படைத்துப் பரிமாறியுள்ளதைக் காட்டுகிறது.

**முடிவுரை:**

விருந்தினர்களுக்கு உணவளித்தல் குறித்த செய்திகள் நற்றிணை முல்லைத் திணைப் பாடல்களில் இடம்பெறவில்லை. பொருளாதாரத்தில் உயர்ந்து வாழ்ந்த பெண்கள், தங்களது கைகளாலேயே விருந்தினர்களுக்குச் சமைத்துப் பரிமாறியதையும் பகல் மற்றும் இரவு நேரங்களைப் பெருட்படுத்தாமல் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று விருந்து அளித்ததையும் அறிய முடிகிறது. சங்க கால தமிழ் மக்கள் சமைக்கப்பட்ட உணவுப் பண்டங்களை வாழை இலையில் வைத்து உண்ட செய்தியும் விருந்தினர்களுக்குப் புலால் உணவுகளைச் சமைத்துப் பரிமாறப்பட்டுள்ள செய்தியும் இடம்பெற்றுள்ளது.

**பயன்பட்ட நூல்கள்:**

[1] இராசமாணிக்கனார் மா (நூ.ஆ), தமிழர் நாகரீகமும் பண்பாடும், பாரி நிலையம், சென்னை, 1983.
[2] இராமையா பிள்ளை. நா (உ.ஆ), நற்றிணை மூலமும் உரையும், வர்த்தமான் பதிப்பகம், சென்னை, 1999.
[3] கந்தையா பிள்ளை ந.சி (நூ.ஆ), தமிழர் சரித்திரம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1964.
[4] திருஞானசம்பந்தம். ச (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.
[5] பத்மனாதன் சி (தொ.ஆ), சங்க இலக்கியமும் சமூகமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியீடு, இலங்கை, 2007.
[6] பவானந்தம்பிள்ளை. ச (தொ.ஆ), தற்கால தமிழ்ச்சொல்லகராதி, மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட், சென்னை, 1925.
[7] புலியூர்க் கேசிகன் (உ.ஆ), நற்றிணைத் தெளிவுரை பகுதி 1 & 2, பாரி நிலையம், சென்னை, 2001.
[8] வெள்ளைவாரணன். க (நூ.ஆ), சங்ககாலத் தமிழ் மக்கள், நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, 1950.